# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 360/மா/2023**

**நாள்: 21.10.2024**

1) திரு எம். கணேசன், இருக்கன்குடி, விருதுநகர் மாவட்டம் - முறையீட்டு
2) டாக்டர் எம். சங்கர்ஜீ, கன்னியாகுமரி மாவட்டம் - மனுதாரர்கள்

ஆணையர், – எதிர்மனுதாரர்
தூத்துக்குடி மாநகராட்சி

விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மேற்கு தெரு, அன்னை இல்லம், கதவு எண் 1/63-A என்கிற முகவரியில் வசிக்கும் திரு எம்.கணேசன் என்பவரின் 8.11.2023 நாளிட்ட மனு மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், மருங்கூர் அஞ்சல், கலைமகள் தெரு, கதவு எண் 11/150 என்கிற முகவரியில் வசிக்கும் டாக்டர் எம்.சங்கர்ஜீ என்பவரின் 09.11.2023 நாளிட்ட மனு ஆகியவை இம்முறைமன்றத்தில் 14.11.2023 மற்றும் 15.11.2023ல் முறையே பெறப்பட்டு, 360/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மேற்கு தெரு, அன்னை இல்லம், கதவு எண் 1/63-A என்கிற முகவரியில் வசிக்கும் திரு எம்.கணேசன் என்பவரின் 8.11.2023 நாளிட்ட மனு மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், மருங்கூர் அஞ்சல், கலைமகள் தெரு, கதவு எண் 11/150 என்கிற முகவரியில் வசிக்கும் டாக்டர் எம்.சங்கர்ஜீ என்பவரின் 09.11.2023 நாளிட்ட மனுக்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி மாநகராட்சி, வார்டு 43, சிவந்தாகுளம், பக்கிள்புரம், பங்களாத் தெருக்களில் போடப்படும் தார்சாலைகள் நெடுஞ்சாலை (மற்றும்) சிறு துறைமுகங்கள் (எச்.என் 2) துறை அலுவலக கடித எண் 5916/எச்.என்/2021–1 நாள் 12.05.2021ன்படி மாநகராட்சி பகுதிகளில் சாலைகளின் மேற்தள கட்டுமானத்திற்கு தேவைப்படும் கனத்திற்கு சுரண்டி எடுத்துவிட்டு (Milling) அதே அளவுக்கு மேற்தளம் Thickness of BC 4 செ.மீ (40mm) அளவிற்கு போடவேண்டும். ஆனால் ஒப்பந்ததாரர்கள் மேற்படி சுற்றறிக்கைக்கு விரோதமாக மேலும் ஒரு அடர்தளம் (Dense Bituminous Macadam (DBM) அமைத்து அதற்கு மேல் (Bituminous Concrete–BC) தார் மிக்ஸ்ட் லேயர் போட்டு சாலை மட்டத்தை உயர்த்தியுள்ளார்கள். ஏற்கெனவே பழைய ரோட்டின் சமதளத்தில் இருந்த பாதாள சாக்கடை மேன்ஹோல் சுவர்கள் தற்போது சுமார் 6 முதல் 9 இஞ்ச் ஆழத்திற்கு புதிய ரோட்டின் கீழ் சென்றுள்ளது. அது போக பாதாள சாக்கடை இணைப்பும் எல்லா வீடுகளுக்கும் முழுமையாக வழங்கவில்லை. மேலும் தற்போது புதிய குடிநீர் பைப் லைன் மூலம் குடிநீர் இணைப்புகள் மாற்றி அமைக்கப்பட்டதால் அந்த பணிகளையும் முழுமையாக சரி செய்யாமல் தற்போது அவசர கதியில் புதிய தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதனால் தண்ணீர் திறக்கும் நேரங்களில் புதிய தார் சாலையின் மேல் பகுதியில் சில இடங்களில் குடி தண்ணீர் வெளியேறுகிறது. ஆக மொத்தத்தில் மக்கள் வரி பணம் வீணடிக்கப்பட்டுள்ளதுடன் இந்த முறை புது ரோடு போட்டதால் சுமார் 6 முதல் 9 இஞ்ச் சாலைகளின் மட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு சுற்றறிக்கைக்கு விரோதமாக செயல்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்ததாரருக்கு சாதகமாக செயல்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அவர்களிடமிருந்து சாலைகள் போடப்பட்ட தொகையை வசூலிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

2) மேற்கண்ட புகார் மனுக்களின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 09.01.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.43, சிவந்தாகுளம், பக்கிள்புரம் பங்களாத்தெருக்களில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022-23 திட்டத்தின் கீழ் சிப்பம் எண் 8ன்படி தார்சாலை மேம்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி பகுதியில் ஏற்கனவே சேதமடைந்த தார்சாலையினை பெயர்த்தெடுத்து விட்டு புதிதாக WMM/DBM/BC கொண்டு சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றும், தாழ்வான பாதாள சாக்கடை இயந்திர குழிகளுக்கான மூடிகள் உயர்த்தப்பட்டு தற்போதுள்ள சாலை மட்டத்திற்கு சமமாக போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றும், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகள் முறையாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், குடிநீர் குழாயில் கசிவுகள் ஏதும் இல்லை என்றும் அதற்கு ஆதாரமாக புகைப்படங்களை அனுப்பி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது சாலை அமைக்கவிருக்கும் பகுதி, சாலையின் தாங்குதிறன், வாகன நெரிசல் முதலியனவற்றை கருத்தில் கொண்டு, முறையாக தொழில்நுட்ப அனுமதி பெற்று சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது '' என தெரிவித்துள்ளார்.

4) இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.09.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 03.09.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் திரு எம். கணேசன் ஆஜராகவில்லை. இருப்பினும் மற்றொரு மனுதாரர் டாக்டர் எம். சங்கர்ஜீ நேரடியாக விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி வார்டு 43, சிவந்தாகுளம், பக்கிள்புரம், பங்களாத் தெருக்களில் தற்போது போடப்பட்ட தார் சாலைகள் சரிவர அமைக்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த சாலையில் ஒரு அடர் தளம் 9 இஞ்ச் அளவிற்கு அமைத்து அதற்கு மேல் தார் மிக்ஸ்டு லேயர் போட்டு சாலையை 9–10 இஞ்ச் அளவிற்கு உயர்த்தியுள்ளார்கள். இதனால் புது ரோடு போட்டதால் சாலையில் உயரம் 6 இஞ்ச் முதல் 9 இஞ்ச் வரை மட்டம் அதிகரித்துள்ளது. மேலும் பாதாள சாக்கடையின் (Manhole) சுமார் 6–9 இஞ்ச் வரை சாலையின் மட்டத்திலிருந்து கீழே அமைந்துள்ளது. அரசு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.என்.2) துறை கடித எண்.5916/எச்.என்.2/2021–1 நாள் 12.05.2021ன்படி மாநகராட்சி பகுதிகளில் சாலைபோடுவது இல்லை என்றும் சாலைகளை சரியாக அமைத்திடவும் இந்த முறைகேட்டிற்கு உடந்தையாக உள்ள அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். 01.09.2024 நாளிட்ட எனது வாதுரை மற்றும் புகைப்படங்களை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6) தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் 03.09.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

<u>மனுதாரர் கேள்வி எண்.1</u>

இதற்கு முன்பு 2012ல் சாலை போடப்பட்டது. தற்சமயம் சாலை போடவேண்டியதின் அவசியம் என்ன?

<u>தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக விளக்கம்</u>

தார் சாலையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். மேற்படி பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் பதிக்கப்பட்டதால் குடிநீர் விநியோக குழாய், குடிநீர் வீட்டிணைப்பு குழாய் மற்றும் இவற்றால் சேதம் அடைந்த பாதாள சாக்கடை வீட்டிணைப்பு குழாய் ஆகியவற்றின் சாலைப் பகுதிகள் சேதம் அடைந்து மோசமானதால் தற்சமயம் 2023–24ல் தார் சாலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் கேள்வி எண்.2</u>

தேவையற்ற வகையில் கூடுதலான இனங்கள் சாலை அமைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

<u>தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக விளக்கம்</u>

“புதிதாக குடிநீர் குழாய் பதித்தல், வீட்டு குடிநீர் இணைப்பு மற்றும் சேதமடைந்த பாதாளசாக்கடை வீட்டு இணைப்பு இவற்றால் சாலை சேதமடைந்துள்ளதால், பழைய சாலையினை முற்றிலும் கொத்தி எடுத்துவிட்டு, 10 செ.மீ கனத்திற்கு Wet Mix Macadam 5 செ.மீ கனத்திற்கு

DENSE BITUMINOUS MACADAM மற்றும் 3 செ.மீ கனத்திற்கு BITUMINOUS CONCRETEம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடானது சென்னையில் உள்ள தலைமை அலுவலகமான நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப்பொறியாளர் அவர்களால் (Ministry of Road Transport and High ways) MORTH விதிகளின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே தேவையில்லாத இனமாக ஏதும் செய்யப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மனுதாரர் கேள்வி எண்.3</u>

சாலையினை கொத்தாமல் போடப்பட்டதால் வீடுகள் தாழ்வாக இருக்கின்றது. இது அரசு ஆணைக்கு புறம்பாக உள்ளது.

<u>தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக விளக்கம்</u>

சாலை போடப்படும் முன்பாக சாலைகள் கொத்தப்பட்டு சாலையின் கழிவுகள் அங்கிருந்து டிராக்டர் மூலம் அகற்றப்பட்டு அதன்பின் தான் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான புகைப்படங்களை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.

வீடுகள், சாலை மட்டத்தை விட மேடாகதான் உள்ளது. அதற்கான புகைப்படங்களை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.

<u>மனுதாரர் கேள்வி எண்.4</u>

பாதாளசாக்கடை மூடிகள் சாலை மட்டத்தை விட உயரமாக உள்ளது.

1. <u>தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக விளக்கம்</u>

மேற்படி சாலைகளில் அனைத்து பாதாளசாக்கடை மூடிகளும் சாலை மட்டத்திலேயே உள்ளது. அதற்கான புகைப்படங்களை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.

<u>மனுதாரர் கேள்வி எண்.5</u>

மேற்படி சாலையில் ஓரிரு இரு சக்கர வாகனங்கள் மட்டுமே செல்கிறது. எனவே சாலைக்கு இவ்வளவு செலவு தேவையில்லை.

<u>தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக விளக்கம்</u>

மேற்படி சாலைகள் அமைந்துள்ள பகுதி திருச்செந்தூர் சாலையினை இரண்டு பகுதிகளிலிருந்து இணைக்கும் பகுதியாக உள்ளது. மேலும் தூத்துக்குடி மாநகராட்சியானது கடல் மட்டத்தை விட தாழ்வாக உள்ளதால் மழை காலங்களில் தேங்கும் தண்ணீரால் சாலை பாதிப்பு அடைந்து மீண்டும் அடுத்த வருடமே புதிதாக தார் சாலை அமைக்கும்படியான நிலை ஏற்படும் என்பதால் இந்த இனங்கள் செய்யப்பட்டுள்ளன. மனுதாரர் கூறியபடி ஓரிரு இரு சக்கர வாகனங்கள் மட்டுமே செல்கிறது என்பது அடிப்படையற்ற வாதமாகும். தற்சமயம் ஒவ்வொரு வீட்டிலுமே நான்கைந்து இரு சக்கர வாகனங்களும் ஓரிரு நான்கு சக்கர வாகனங்களும் உள்ள நிலையில் மனுதாரரின் வாதம் நியாயமற்றது. புதிதாக வீடு கட்டுவதாலும் முக்கிய பகுதியாக இருப்பதாலும், கனரக வாகனங்களின் பயன்பாடும் அதிகமாக உள்ள காரணத்தினால் மேற்படி பகுதியில் தரமான சாலையின் தேவை உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர்களில் ஒருவரான திரு.M.கணேசன், இருக்கன்குடி அவர்கள் 03.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததால் அன்னாரை 03.10.2024 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தால் மீண்டும் ஒரு வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. 03.10.2024 அன்றைய நேரடி விசாரணையிலும் திரு M.கணேசன் ஆஜராகவில்லை.

8) முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மற்றும் டாக்டர் **M.சங்கர்ஜீ அவர்களின்**, வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

9) மனுதாரர்கள் தூத்துக்குடி மாநகராட்சி வார்டு 43, சிவந்தாகுளம், பக்கிள்புரம், பங்களாத் தெருக்களில் போடப்பட்ட தார்சாலைகள் சரிவர அமைக்கப்படவில்லை என தெரிவித்து இதற்கு காரணமாக உள்ள அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்கள்.

10) மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலைகள் 2012ல் போடப்பட்டது. தார் சாலையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். மேற்படி பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் பதிக்கப்பட்டதால் குடிநீர் விநியோக குழாய், குடிநீர் வீட்டிணைப்பு குழாய் மற்றும் இவற்றால் சேதம் அடைந்த பாதாள சாக்கடை வீட்டிணைப்பு குழாய் ஆகியவற்றின் சாலை பகுதிகள் சேதம் அடைந்து மோசமானதால் தற்சமயம் 2023–24ல் தார் சாலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக குடிநீர் குழாய் பதித்தல், வீட்டு குடிநீர் இணைப்பு மற்றும் சேதமடைந்த பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு இவற்றால் சாலை சேதமடைந்துள்ளதால், பழைய சாலையினை முற்றிலும் கொத்தி எடுத்துவிட்டு, 10 செ.மீ கனத்திற்கு Wet Mix Macadam 5 செ.மீ கனத்திற்கு BITUMINOUS MACADAM மற்றும் 3 செ.மீ கனத்திற்கு BITUMINOUS CONCRETEம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடானது சென்னையில் உள்ள தலைமை அலுவலகமான நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப்பொறியாளர் அவர்களால் (Ministry of Road Transport and Highways) MORTH விதிகளின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சாலை போடப்படும் முன்பாக சாலைகள் கொத்தப்பட்டு சாலையின் கழிவுகள் அங்கிருந்து டிராக்டர் மூலம் அகற்றப்பட்டு அதன்பின் தான் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. வீடுகள், சாலை மட்டத்தை விட மேடாக உள்ளதும், சாலைகளில் அனைத்து பாதாள சாக்கடை மூடிகளும் சாலை மட்டத்திலேயே உள்ளதும், தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக சமர்பிக்கப்பட்ட புகைப்படங்களின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும் தூத்துக்குடி மாநகராட்சியானது கடல் மட்டத்தை விட தாழ்வாக உள்ளதால் மழை காலங்களில் தேங்கும் தண்ணீரால் சாலை பாதிப்பு அடைந்து மீண்டும் அடுத்த வருடமே புதிதாக தார் சாலை அமைக்கும்படியான நிலை ஏற்படுவதும் மேற்கண்ட பகுதியில் கனரக வாகனங்களின் பயன்பாடு அதிகமாக உள்ள காரணத்தினால் தரமான சாலையின் தேவை உள்ளது என்பதும், இது தொடர்பான தற்போது எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அலுவலரின் வாக்குமூலம் வழியாக தெரிய வருகிறது.

மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் சாலைகள், முறைப்படியாக விதிகளுக்கு உட்பட்டு போடப்பட்டு இருப்பதாக தெரிவித்து இருந்தாலும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள புகார்கள் தொடர்பாக இணை இயக்குநர் மற்றும் பொறியாளர் அடங்கிய குழு ஒன்றினைஅமைத்து புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை அக்குழு மீண்டும் கள ஆய்வு செய்து அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்குமாறும், மேற்காணும் சாலைகளில் ஏதாவது

குறையிருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டால் அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.M.கணேசன்,
1/63–A, அன்னை இல்லம்,
மேற்கு தெரு,
இருக்கன்குடி–626 202,
விருதுநகர் மாவட்டம்.

2) Dr.M.சங்கர்ஜீ,
11/150, கலைமகள் தெரு,
மருங்கூர் அஞ்சல்–629 402,
கன்னியாகுமரி மாவட்டம்.

3) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி
தூத்துக்குடி.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இ.கோ / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).